மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவை கடல்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper
உதயன்
விலை
ரூபா
5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
ராசியான முன்னணி
நிறுவனம்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்:

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 28 செவ்வாய்க்கிழமை (13 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 290

அரசாங்கத்துடன் பூர்வாங்க பேச்சு நடத்துவதற்கு
4 பிரதிநிதிகளை தலைவர் பிரபாகரன் நியமித்தார்!

சந்திரிகாவுக்கு நேற்று பதில்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 13

ஸ்ரீலங்கா அரசுடன் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்துவதற்காக விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வப் பிரதிநிதிகள் நால்வரை தலைவர் திரு. வே. பிரபாகரன் நியமித்துள்ளார்.

ஸ்ரீலங்காவின் புதிய பிரதமரான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு நேற்று தாம் அனுப்பி வைத்த பதில் கடிதத்தில் மேற்படி நான்கு பிரதிநிதிகளின் பெயர் விவரங்களை அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் சந்திரிகாவுக்கு தலைவர் பிரபாகரன் எழுதிய பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மதிப்பிற்குரிய சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா,
பிரதம மந்திரி,
சிறிலங்கா.

அன்புள்ள பிரதம மந்திரி அவர்களுக்கு!

9, செப்டம்பர், 1994 திகதியிடப்பட்ட உங்களது கடிதம் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சி. எமது காவலிலிருந்த 10 காவல்துறை வீரர்களை நாம் விடுதலை செய்தமை எமது நல்லெண்ணத்தைக் காட்டுவதாக நீங்கள் வரவேற்றுள்ளீர்கள். அதையிட்டு மகிழ்வடைகிறோம்.

பொருளாதார தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்கள் யாழ்ப்பாண மக்களுக்கு உடனடியாகக் கிடைக்க வேண்டுமென நீங்கள் விருப்புவதை நாம் வரவேற்கிறோம். இந்த விடயத்தில் நாமும் அதே அக்கறையுடையவர்களாகவே இருக்கிறோம். மிகவும் அவசரமான இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண விழையும் உங்களது முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

சீரமைப்புப் பணி நடக்க முழு ஒத்துழைப்பு தருவோம்

மின்சார விநியோகத்தை மீள அமைக்கவும், பெருஞ்சாலைகளைத் திருத்தவும், நீர்ப்பாசனத் திட்டங்களை சீரமைக்கவும் உங்களது அரசாங்கம் முடிவு செய்திருப்பதை நாம் வரவேற்கிறோம். இந்த சீரமைப்பு சேவைகளில் ஈடுபடப்போகும் அரசாங்க தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு எமது இயக்கம் சகல ஒத்துழைப்புகளையும் வழங்குமென உறுதி கூறுகிறோம்.

பிரதிநிதிகளாக கரிகாலனுடன் இளம்பரிதி, ரவி, டொமினிக்

சமாதான பேச்சுகளுக்கு நாம் விடுத்த வேண்டுகோளுக்கு சாதகமான முறையில் நீங்கள் பதிலளித்திருப்பதை நாம் வரவேற்கிறோம். ஆரம்ப பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டிருந்தீர்கள். பூர்வாங்க பேச்சுக்களை நடத்துவதற்கு நான்கு அதிகாரபூர்வமான பிரதிநிதிகளை நாம் நியமித்திருக்கிறோம். நீங்கள் குறிப்பிட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களின் சீரமைப்பு வேலைகள் குறித்தும் இவர்கள் உங்களது பிரதிநிதிகளுடன் பேசுவார்கள்.

நாம் நியமித்துள்ள பிரதிநிதிகளின் விவரம் வருமாறு:-

★ திரு. கே. கரிகாலன்— [துணைப் பொறுப்பாளர், அரசியல்துறை]
★ திரு. சி. இளம்பரிதி— [அரசியல் பொறுப்பாளர், யாழ். மாவட்டம்]
★ திரு. ஆ. ரவி— [பொறுப்பாளர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்]
★ திரு. ச. டொமினிக்— [பொறுப்பாளர், தமிழீழ நிர்வாக சேவை]

யுத்தநிறுத்த யோசனைக்கு பதில் தராதது வருத்தமே!

போர் நிறுத்தம் சம்பந்தமான எமது யோசனை பற்றி நீங்கள் உங்களது கடிதத்தில் எதுவுமே குறிப்பிடாததையிட்டு நாம் வருந்துகின்றோம். சமாதானம், நல்லெண்ணம், இயல்புநிலையைத் தோற்றுவித்தல் போன்றவற்றை கட்டியெழுப்பும் பணிக்கு போர் நிறுத்தமானது அத்தியாவசியம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். எனவே இவ்விடயத்தில் நீங்கள் அவசரசிரத்தை கொள்வீர்களென நம்புகிறோம்.

நன்றி

இப்படிக்கு,
தங்கள் நேர்மையுள்ள
வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

கிளாலி - பூநகரி படகுச் சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமைபோல நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

அரச அதிபருக்கு பதவி நீடிப்பு

யாழ். அரச அதிபராக மேலும் ஒருவருடம் கடமையாற்ற திரு கா மாணிக்கவாசகருக்கு புதிய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் அரச அதிபராக பணியாற்றிய திரு கா. மாணிக்கவாசகரின் பதவிக்காலம் இம்மாதத்துடன் முடிவடையவிருந்தது.

அடுத்த மாதம் முதல் மேலும் ஒருவருட காலத்துக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-3)

மீண்டும் பழைய கல்வி நிர்வாகமுறை?

யாழ்ப்பாணம், செப். 13

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் மீண்டும் பிராந்திய கல்விப்பணிப்பாளர் நிர்வாக முறையைக் கொண்டுவர வடக்கு — கிழக்கு மாகாண சபை முடிவு செய்துள்ளதாக மாகாண சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரதேச கல்விப் பணிப்பாளர் முறை மாற்றப்பட்டு தற்போது வலய, பிரதேச கல்விப் பணிப்பாளர் முறை அமுல் செய்யப்பட்டு வருகிறது.

கல்வி சம்பந்தமான அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பணிகளை மேற்கொள்வதற்கு தற்போதைய முறையின் படி 84 பிரதேச கல்விப் பணிப்பாளர்களையும், பத்து வலயப்பணிப்பாளர்களையும் கூட்டங்களுக்கு அழைக்க வேண்டியுள்ளதாகவும் —

பெரும்பான்மையினர் சமுகமளிக்காத நிலையில் முடிவுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் —

திட்டங்களை நடைமுறைப்படுத்த பலரின் ஒத்துழைப்பையும் பெறுவதில் கஷ்டம் ஏற்படுவதாகவும் —

இதனால் இத்திட்டத்தை கைவிட முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி விளக்கமளித்தார்.

பிராந்திய கல்விப்பணிப்பாளர் முறையைக் கொண்டுவருவதன் மூலம் வடக்கு—கிழக்கில் உள்ள எட்டுப் பணிப்பாளர்கள் மூலம் விரைவாகத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வழி ஏற்படும் எனவும் அந்த அதிகாரி [illegible] மளித்தார்.

தலைவரின் பேட்டி இன்று பி.பி.ஸியில்

பி.பி.ஸி, தமிழ்ச்சேவை செய்தியாளர் ஆனந்திக்கு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கிய பேட்டி பி.பி.ஸி தமிழ்ச் சேவையில் இன்று ஒலிபரப்பாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பி.பி.ஸி. செய்தியாளர் ஆனந்தி கடந்த வாரம் வடக்கே வந்து தங்கியிருந்த போது தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்து பேட்டி கண்டிருந்தார். அந்தப் பேட்டியே இன்று ஒலிபரப்பாகவுள்ளது.

விபத்தில் பலி

யாழ்ப்பாணம், செப் 13

முகமாலை கண்டி வீதியில் நேற்று இரவு 7-30 மணிக்கு இடம்பெற்ற லொறி சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்; சைக்கிள் முற்றாக சேதமடைந்தது.

இரவு வேளை வெளிச்சமின்றி சென்ற லொறியே விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் சைக்கிளில் சென்ற பளையைச் சேர்ந்த காத்தான் வீரய்யா (வயது48) என்பவரே மரணமானவராவார். [இ-15]

விவரமாகப் பேச விருப்பம் தெரிவித்து சந்திரிகா கடிதம்

யாழ்ப்பாணம் செப். 13

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக நீங்கள் விடுத்த அறிக்கையை நாம் மிகவும் ஆர்வத்துடன் நோக்கினோம். இது பற்றி நாம் விவரமாக உங்களுடன் பேச விரும்புகிறோம். எமது பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நீங்களும் உங்களது பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—இவ்வாறு பிரதமர் சந்திரிகா தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதமர் சந்திரிகாவின் கடிதம் வருமாறு:-

பிரதமர் செயலகம்
09. செப்ரெம்பர் 1994

திரு. வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
தலைமைச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

அன்பின் பிரபாகரன் அவர்களுக்கு!

யாழ்ப்பாணம் மற்றும் வடபகுதி மக்கள் மீது முன்னைய அரசு திணித்திருந்த பொருளாதாரத் தடையை நாம் நீக்கியுள்ளமை எமது நல்லெண்ணத்தை காட்டுவதாக நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள். இதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். அத்தோடு பல ஆண்டுகளாக விடுதலைப் புலிகளின் தடுப்புக் காவலிலிருந்த 10 காவல் துறையினரை விடுதலை செய்வதற்கு நீங்கள் முடிவெடுத்ததை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். இது உங்களின் ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக மட்டுமன்றி வடக்கு—கிழக்குப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் உங்களது ஆக்கபூர்வமான நோக்கிற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் அமைவதாக நாம் கருதுகிறோம்.

விவரமாகப் பேச விரும்புகிறோம்

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு தயாராக இருப்பதாக நீங்கள் விடுத்த அறிக்கையை நாம் மிகவும் ஆர்வத்துடன் நோக்கினோம். இதுபற்றி நாம் விவரமாக உங்களுடன் பேச விரும்புகிறோம். எமது பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நீங்களும் உங்களது பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தடைகள் நீக்கப்பட்ட பொருள்கள் நாம

(4 ஆம் பக்கம் பார்க்க)

டி.பியின் தேர்தல் வாக்குறுதி "அவுட்"!

அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 13

தேர்தல் வாக்குறுதியாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அரச ஊழியர்களுக்கு வழங்கிய சம்பள உயர்வை புதிய அரசாங்கம் நிறுத்தியுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்குமென்ற ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் அறிவிப்பை பொது நிர்வாக அமைச்சு 29/94 மற்றும் 30/94 இலக்க சுற்றுநிருபங்களின்படி சகல அரச அலுவலகங்களுக்கும் அறிவித்திருந்தது.

அந்தச்சுற்றுநிருபம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும்— முந்திய 37/92 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின்படி சம்பளத்தை வழங்குமாறும்—

பொதுநிர்வாக அமைச்சு அறிவித்துள்ளதாக யாழ். அரச அதிபர் திரு கா மாணிக்கவாசகர் நேற்று யாழ் செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

அதேவேளை —

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்க்கும் வகையில் அரசு விசாரணைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



டி.பியும் அவுட்! அவரின்ரை வாக்குறுதியும் அவுட்!!

கோமாரியில் மா வரும்

யாழ்ப்பாணம், செப். 13

பருத்தித்துறைக்கு இன்று காலை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'கோமாரி' கப்பலில் 8 ஆயிரம் மெற்றிக்தொன் மா எடுத்து வரப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் இருந்து மா கூட்டுறவு வழியாக இறக்கப்பட்டு பொதுமக்களுக்கு கிலோ 7 ரூபாப்படி விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

புதிய தொழிற்சங்கத்தை செல்லச்சாமி ஆரம்பிப்பார்

கொழும்பு, செப். 13

இ.தொ.காவிலிருந்து வெளியேற்றப்பட்ட எம்.எஸ். செல்லச்சாமி மலையகத்தில் புதிய தொழிற்சங்கம் ஒன்றை அமைக்க உள்ளார் எனத் தெரியவருகிறது.

இ.தொ.கா—செல்லச்சாமி அணி என்று இத்தொழிற்சங்கத்திற்கு பெயரிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய தொழிற்சங்கம் இவ்வாரத்தில் பதிவு செய்யப்படும் என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

ஜனாதிபதி தேர்தலில் ஒஸியும் போட்டி!

கொழும்பு, செப். 13

எதிர்வரும் நவம்பரில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஒரு பிரிவின் தலைவரான ஒஸி அபேகுணசேகரா போட்டியிடவிருப்பதாக தெரிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட ரணில் விக்கிரமசிங்காவுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாததன் காரணத்தினால் தான் போட்டியிட முடிவு செய்துள்ளதாக ஒஸி அபயகுணசேகரா தெரிவித்துள்ளார்.

காமினி திஸநாயகாவுக்கு ஐ.தே.க. வேட்பாளர் நியமனம் கொடுக்கப்பட்டிருப்பது ஒஸிக்கு அதிருப்தியை கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[illegible] கடந்த பொதுத் தேர்தலில் [illegible] வேட்பாளராகப் போட்டியிட்டு எம்.பியாக தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் —

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை எதிர்த்து 1982 இல் ஜனாதிபதித் தேர்தலில் ஒஸி போட்டியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

சந்திரிகாவை இழிவுபடுத்தும் சுவரொட்டிகள் மீட்பு!

இருவர் பொலீஸாரால் கைது

பிரதமர் சந்திரிகாவை இழிவுபடுத்தும் விதத்தில் அச்சிடப்பட்ட பெருந்தொகையான சுவரொட்டிப் பிரசுரங்களுடன் இரண்டு நபர்களை பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வி. குணரத்னாவின் முறைப்பாட்டைத் தொடர்ந்து களனிசப் பொலிஸார் ஹோட்டல் ஒன்றை முற்றுகையிட்டனர். அப்போது இச்சுவரொட்டிப் பிரசுரங்களுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

தமக்குக் கிடைத்த துப்பு ஒன்றை அடுத்தே தாம் பொலிஸாருக்கு இம்முறைப்பாட்டைச் செய்ததாக அமைச்சர் குணரத்ன தெரிவித்தார். [ஐ-எ]

லயனல் பெர்னாண்டோ தகவல் சேகரிக்கிறார்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஒலிபரப்பு, தகவல்துறை அமைச்சுச் செயலாளர் லயனல் பெர்னாண்டோ கொழும்பில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

திறைசேரி மற்றும் மின்சக்தி, புனர்வாழ்வு மற்றும் முக்கிய அமைச்சு அதிகாரிகளுடன் கலந்துரையாடி அவர் தகவல்களை சேகரித்து வருவதாகவும்—

பேச்சுக்களில் இடம்பெறும் விடயங்கள் குறித்து அமைச்சர்களுடன் கலந்துரையாடி பூர்வாங்க பட்டியலை தயாரிப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

அபிவிருத்தி திட்டங்கள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் பற்றிய தரவுகள் மற்றும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

முட்டையிடும் கோழி, சொலிவ், சாமடிக்கேசஸ், வண்டம், பிறிஜ், பாமாஸ் கோழிகள் சோடியாக விற்பனைக்குண்டு. "ஈஸ்வரி இல்லம்", மேஜர் செல்வராசா வீதி, மடத்தடி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு. (32828)

Double Bed, Hose Pipe 1", கதிரைகள், சாப்பாட்டு மேசை, பிளாஸ்டிக் பாய்கள் விற்பனைக்குண்டு. இல. 166, சேர் பொன் ராமநாதன் வீதி, திருநெல்வேலி. (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்திற்கு முன்பாக) [32847]

காணல்

கே. டானியலின் கானல் கல்வியல் கட்டுரைகள் சோ. சந்திரசேகரம். தமிழ் கற்பித்தலில் உன்னதம் ஆசிரியர் பங்கு ஆக்கம்; பேராசிரியர் சிவத்தம்பி. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-9154]

கோழிக்குஞ்சு விற்பனை

Prima, Broiler குஞ்சுகள் 14-9-94 புதன்கிழமை பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [32850]

மணிக்கூடுகள்

உங்கள் பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் உதிரிப் பாகத்திற்காக விற்று நீங்கள் விரும்பும் நல்ல நிலையில் உள்ள வேறு மணிக்கூடுகள் மாற்றிப் பெற்றுக் கொள்ளலாம். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ளலாம். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஆரியகுளம் சந்தி (வானவில் அருகில்), யாழ்ப்பாணம். (சி-9042)

உலர் உணவு விநியோகம்

ஜூலை மாதத்தின் கடைசி இருவாரங்களுக்குமுரிய 17பி முத்திரைகளுக்கான இடம் பெயர்ந்தவர்களின் உலர் உணவுப் பொருட்கள் தற்போது யாழ். செயலகப் பிரிவு வாழ்வுப் பகுதிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இம்முறை அரிசி, மா, சீனி, மைசூர்பருப்பு, தேயிலை, சன்லைற்சோப் ஆகியனவும் 4 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பம் ஒன்றிற்கு சிந்தாமணிக் கடலையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக உணவு முத்திரை

தை-ஆவணி மாதங்களுக்கான, வயது 5-18 வரையுள்ள பிள்ளைகளுக்கான மேலதிக உணவு முத்திரை நல்லூர்பிரதேச செயலகத்தினால் அப்பிரிவுக் கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இம் முத்திரைக்கு உரித்தானவர்கள் அவ்வப்பகுதி கிராம அலுவலர்களிடம் உடனடியாகப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர் (க)

கிக்ஸ் அக்கடமி

தாவடி

SPOKEN ENGLISH
By
BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்,
15-09-94 காலை 8-30
கேக் இரண்டு வகுப்பும்
ஆரம்பம்,
சனி, ஞாயிறு 9—11
சான்றிதழ்கள் வழங்கப்படும்.

— நிர்வாகி

(7911

விற்பனையாகிறது!

இளங்கவிஞர்களுக்கான இரு திங்கள் ஏடு

கவிதை

(ஆவணி - புரட்டாதி)

விலை: ரூபா 15/-

(32852)

நன்றி நவிலல்

கடந்த 08 — 09 1994 வியாழக்கிழமையன்று நடைபெற்ற

பாலச்சந்திரசர்மா ❊ மதுமதி

தம்பதிகளின்

திருமண வைபவத்தின் போது வருகை தந்து வாழ்த்துக்கள் கூறிய அனைத்து உறவினர்களுக்கும், நண்பர்கள் மற்றும் வேலணை - ஊர்காவற்றுறை பிரதேச செயலக நிர்வாக அதிகாரிகள், ஊழியர்கள், சிரேஷ்ட கிராம சேவை அலுவலர்கள், புதிய கிராம சேவை அலுவலர்கள், அராலி மத்தி அருள்மிகு ஸ்ரீநாக பூஷணி அம்பாள் ஆலய பக்தர்கள் மற்றும் ஏனையோருக்கும் எங்களது இதயபூர்வமான நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மணமக்களும்,
பெற்றோர்களும்.

ஸ்ரீநாகபூஷணி அம்பாள் கோவிலடி,
அராலி மத்தி, அராலி. [7912]

BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,

A/L கலை, வர்த்தகம்

பகல் நேர வகுப்புகள்

(A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்குரியது)

ஆரம்பம்: 29 - 09 - 1994

வியாழன் 8 - 00 a m.

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

[சி-9161]

KEEN

திருநெல்வேலி

A/L DAY CLASS

(A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்குரிய வகுப்பு)

பொருளியல்	— எஸ். வரதராஜன்
கணக்கியல்	— செனந்தி
வர்த்தகம்	— வரதன்
அளவையியல்	— எஸ். எஸ். மனோகரன்
தமிழ்	— பாலா
புவியியல்	— சேரன்
இந்துநாகரீகம்	— ஊரை. எஸ். கேகிசா

ஆரம்பம்: 20-09-1994

செவ்வாய் காலை 8 a m.

[சி-9165]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சுருவில்லூர் பெருந்தகையான்
அமரர்
பொன்னுத்துரை குணபாலசிங்கம்

மண்ணுலகு: 03 09 — 1941
விண்ணுலகு: 25 — 08 1993

திதி: **1994 - 09 - 13**

பன்னிரண்டு மாதங்களாய்
அப்பாவே நீர் பிரிந்தும்!
ஆண்டாண்டாய் நீர் தந்த
ஆதரவை நாம் மறவோம்!
பண்பு எனும் பசளையிட்டு
பாசமுடன் ஆளாக்கி
அன்பு எனும் நீரூற்றி
ஆசையுடன் வளர்த்தெடுத்தீர்!
இன்பத்திலும் துன்பத்திலும்
சலிக்காது தலை நிமிர்த்து
எம்மைக் காத்திட்ட அப்பாவே
உங்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்.

94, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

முக்கிய அறிவித்தல்

கலை ஊடக இணைய அவசர நிர்வாகசபை கூட்டம் இன்று (13 — 09 — 1994) பி. ப. 3-00 மணிக்கு கலை ஊடக இணைய காரியாலயத்தில் நடைபெறும். நிர்வாகசபை உறுப்பினர்கள் தவறாது வந்து கொள்ளவும்.

செயலாளர்,
கலை ஊடக இணையம்

(சி-9109)

யா/மல்லாகம் மகா வித்தியாலயம்

பரிசளிப்பு விழாவும்

நிறுவுநர்

நினைவு தினமும்

காலம்: **14 - 09 - 1994** புதன்கிழமை
பிற்பகல் 4 மணி

இடம்: யா/மல்லாகம் மகா வித்தியாலய
(இ.போ.ச. பேருந்து) மண்டபம்

தலைவர்; திரு. வி. சச்சிதானந்தன்
(அதிபர்)

பிரதம விருந்தினர்: திரு. க. கந்தசாமி
(கல்விப் பணிப்பாளர் வலயம் - 2
யாழ்ப்பாணம்)

நிறுவுநர் நினைவுப் பேருரை:
சமூகஜோதி திரு. சு. ஸ்ரீபாஸ்கரன்
(தலைவர், மல்லாகம் கிராம அபி. சங்கம்)

சிறப்பு விருந்தினர்கள்:
சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை)
திரு. செ. நளின்
(மல்லாகம், சிற்றூராட்சிப் பொறுப்பாளர்)

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சபையினர்

அன்பளிப்பு:
ஐ. பேரம்பலம் அன் சன்
கே.கே.எஸ். றோட், சுன்னாகம்.
(7639)

31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

ஆறுமுகம் லோகேஸ்வரன்

(பாடசாலை, அ. ச. செயலாளர்)

சின்னத்தம்பி அகிலன்

(5ஆம் ஆண்டு மாணவன்)

ஆகஸ்ட் 13இல் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் எம்மை விட்டு மறைந்த எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஆ. லோகேஸ்வரன் அவர்களினதும், எமது பாடசாலையின் 5ஆம் ஆண்டு மாணவன் சி. அகிலனதும் அவரது குடும்ப உறுப்பினர் நால்வரதும் அகால மரணத்தினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பெற்றோர், நலன்விரும்பிகள்.

யா/தோப்பு அருள்நந்தி வித்தியாசாலை,
அச்சுவேலி. (32311)

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 07 — 02 — 1947
விண்ணில்: 29 — 08 — 1990

திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு

திதி 13 — 09 — 1994

எங்கள் அம்மா! அன்பின் பிறப்பிடமே, சாந்தத்தின் உறைவிடமே நீ மறைந்து நான்கு ஆண்டுகள் ஓடியபோதும் உன் நினைவலைகள் ஓயாது ஒருபோதும். அம்மா உன்னை இழந்து வாடுகிறார்-கணவர் கன்றிழந்த பசுப்போல தவிக்கிறார்கள் - பிள்ளைகள்.

கணவர், பிள்ளைகள்,
உறவினர்கள்

89, [29] காரைக்காட்டு லேன்,
[illegible]
யாழ்ப்பாணம்.

(32826)

செல்வி ருஷாந்தியின் பரத நாட்டிய அரங்கேற்றம்

நளாயினி இராசதுரை அவர்களின் மாணவி
(உதவி கல்விப் பணிப்பாளர் நடனம்)

செல்வி ருஷாந்தி குமரேசபசுபதி

(யாழ். இந்து மகளிர் உயர் தர பழைய மாணவி)
அவர்களின்

பரத நாட்டிய அரங்கேற்றம்

நாளை 14 — 09 — 94 புதன்கிழமை
மாலை 4— 30 மணிக்கு
நல்லூர் இளம் கலைஞர்
மண்டபத்தில்

திரு. பொன். சுந்தரலிங்கம்
(இளம் கலைஞர் மன்றத் தலைவர்)
அவர்களின் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
(முதல்வர் தமிழ்த் துறை யாழ். பல்கலைக் கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இடைக்காடு, அச்சுவேலி
திரு. நடராசா குமரேசபசுபதி
(இளைப்பாறிய அதிபர், பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி நிலையம்)

இடைக்குறிச்சி, வரணி
திருமதி யோகேஸ்வரி குமரேசபசுபதி
(இளைப்பாறிய ஆசிரியை, கல்வியங்காடு - இ. த. க. பாடசாலை)

செல்வன் ந கு. பவன்
(ஆசிரியர், தென் ஆபிரிக்கா)

செல்வன் கு. கிரிதரன்
(பொறியியல் மாணவன், லண்டன்)

வேலா தோப்பு,
கட்டப்பிராய்,
யாழ்ப்பாணம். (32854)

31ஆம் தின (சபிண்டீகரண) அழைப்பும் நன்றி நவிலலும்

அவனியல் பிறப்பு: 12 — 03 — 1932
அவசர அழைப்பு: 14 — 08 — 1994

அமரர் ஆறுமுகம் லோகேஸ்வரன்

(இளைப்பாறிய ஆசிரியர் - அச்சுவேலி)

"பதியினிலே எங்களுடன் பாசமாக வாழ்ந்த நீங்கள் மதியிழந்த கொடியவரால் மரணித்ததும் ஏன் அப்பா? விதியாக வந்த ஷெல்லின் வீணாய்ப் போனதனால் கதிகலங்கி நிற்கின்றோம் கண்ணீரால் நனைகின்றோம்"

அமரரின் ஆத்மசாந்திக்கான கிரியைகள் இன்று (13-09-1994) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 30 மணி தொடக்கம் நடைபெறும். அவ்வேளை அன்பர்கள் யாவரும் கலந்து கொள்வதுடன், மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அன்னாரின் இறுதிக்கருமங்கள் தொடர்பாக அனைத்து வழிகளிலும் பல்வேறு உதவிகளை வழங்கிய சகல அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நவில்கிறோம்.

இங்ஙனம்:
மனைவி, மகள், மகன், மருமகன்.

நாவலர் பாடசாலையடி,
தோப்பாய். (32868)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 01 — 1935
மறைவு: 13 — 09 — 1993

திருமதி இராஜேஸ்வரி சிவப்பிரகாசம்

பாசம் மிகுந்த பதியும் நேசம் நிறைந்த பிள்ளைகளும்
வாச மலர் தாம் தேடி வெதும்பியழ,
வேதம் களும் விரும்பும்
விண்ணோர் காண வியன்பாதம்,
வேண்டி மறைந்தனையே சாந்தி பெறுக
வென்றே வேண்டுவமே:

R. சிவப்பிரகாசம் (கணவர்),
பிள்ளைகள், உறவினர்கள்.

"யமுனா"
ஆனைக்கோட்டை.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில்.
[32849]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

எங்கே நிற்கிறார்?

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னரும் ஆயுதப் படைகளுக்கு ஆள் திரட்டும் பணிகள் தொடர்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தின் கொமாண்டோ ரெஜிமென்ட், கடேற் அதிகாரிகள் ஆகிய பிரிவுகளுக்கு ஆள் திரட்டுவதற்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த வாரத்திலும், நேற்றும் நடைபெற்றன. அதே போல கடற்படையில் தொண்டர் படைக்கும் ஆள் திரட்டும் வேலை நடந்து வருகிறது.

ஏற்கனவே தேர்தலுக்கு முன்னர் திட்டமிட்டிருந்தபடி அலுவல்கள் நடைபெற்று வருகின்றன. படைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதாவது ஐக்கிய தேசியக் கட்சி அரசு காலத்தில் எடுக்கப்பட்ட முடிவு இப்போது செயற்படுத்தப்படுகிறது. அதனை நிறுத்துமாறு புதிய அரசு உத்தரவு எதனையும் போடவில்லை!

ஐ.தே.கட்சி அரசாங்கம் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை மறந்து இராணுவத் தீர்வையே நாடியது. அதனால் போரை நீடிக்க விரும்பியது. அதற்கேற்ற வகையில் அது இராணுவத்தின் படைபலத்தை அதிகரிக்கத் திட்டமிட்டிருந்தது. அடிக்கடி ஆளணியைத் திரட்டுவதும், இராணுவ உபகரணங்களை வாங்குவதுமாக இருந்தது.

ஆயுதம் மற்றும் தளபாடக் கொள்வனவில் மட்டும் அன்றி, ஆளணியினரைப் பராமரிப்பதிலும் கூட படை உயர் அதிகாரிகளும், தரகர்களும் லட்சம் லட்சமாக, கோடி கோடியாகச் சம்பாதித்தனர். அதனால் முந்திய திட்டங்களை அவர்கள் தொடர்ந்து செயற்படுத்த முற்படுவது இயல்பே.

மேற்கூறிய விடயங்கள் இரகசியமானவை அல்ல. அனேகமாக நாட்டு மக்களுக்குத் தெரிந்தவையே. குறிப்பாக பொதுத் தேர்தல் காலத்தில் சந்திரிகா குமாரதுங்கா இவற்றை பிரசாரக் கூட்டங்களில் தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக் கூறி வந்தார்.

ஐ. தே. க. அரசு யுத்தத்துக்காக வருடாந்தம் செலவு செய்து வரும் 2,500 கோடி ரூபாவையும் அபிவிருத்தித் துறைக்கு ஆற்றுப்படுத்தினால் நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டத்தையும், வறுமையையும் ஒழிக்கலாம் என்று கூறினார். தாம் பதவிக்கு வந்தால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் கண்டு போருக்கான செலவை இல்லாமற் செய்து அபிவிருத்திக்குப் பயன்படுத்தப் போவதாகவும் சந்திரிகா சொன்னார்.

பிரதமராகப் பதவியேற்ற பின்னர், முந்திய அரசு செய்துவந்த வேண்டாத செலவுகளை நிறுத்த சந்திரிகா உத்தரவிட்டுள்ளார். பழைய அரசின் பல கொள்வனவுகளை நிறுத்துமாறு பணித்திருக்கிறார். ஊழல் பேர்வழிகளை முக்கிய பதவிகளிலிருந்து களைந்து வருகிறார்.

அந்த வகையில் படைபலத்தைப் பெருக்குவதையும் நிறுத்துமாறு அவர் பணித்திருக்க வேண்டும். இது சிறிய விடயமோ அல்லது வேலைப்பளுவில் மறந்துவிடக் கூடிய விவகாரமோ அல்ல.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே காண்பது என்ற வழியில் நடக்கத் தொடங்கியிருக்கும் சந்திரிகா, படைக்குப் புதியவர்களைச் சேர்ப்பதை நிறுத்துமாறு இதுவரை உத்தரவிடாமல் இருப்பது இயல்பாகவே ஒரு சந்தேகத்தை எழுப்புகிறது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சிகளை ஒரு பக்கத்தில் செய்து கொண்டு, படை அதிகாரிகள் முந்திய அரசின் திட்டப்படி, படை அணி திரட்டுவதை அனுமதிப்பது ஏற்புடையதல்ல.

யுத்த நிறுத்தம் பற்றி அறிவிக்கவேண்டிய வேளையில் இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பது பொருந்துமா? படை அதிகாரிகளுக்கு உத்தரவிட பிரதமர் பின் நிற்கிறாரா?

இவ்விடயத்தில் பிரதமர் என்ன செய்யப்போகிறார்? எங்கே நிற்கிறார்?

சமாதானத்துக்கான அரிய வாய்ப்பு கைக்கு எட்டிய தூரத்தில்!

டெய்லி நியூஸ் ஆசிரிய தலையங்கம்

கொழும்பு, செப். 13

பல ஆண்டுகளாக நடந்து வரும் யுத்தத்தின் பின்னர் நாடு இன்று அமைதியை எதிர்பார்க்கிறது. சமாதானத்துக்கான, மதிப்பிடமுடியாத வாய்ப்பு கைக்கு எட்டிய தூரத்தில் இன்று உள்ளது. தேசிய அழிவா அல்லது இன அமைதியா என்பதை தெரிவு செய்யும் கட்டம் இது.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள டெய்லி நியூஸ் ஆங்கில நாளிதழில் (9-9-1994) வெளியான ஆசிரியர் தலையங்கத்தில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடக்கு — கிழக்கு யுத்தத்துக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை இரு தரப்பிலும் அதிகரித்து வருகிறது.

பல ஆண்டுகளின் பின் முதல் தடவையாக அரசுக்கும் நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் கட்சிகளுக்கும் இடையே கருத்துடன்பாடு ஒன்று உருவாகி வருகிறது.

அரசாங்கம் சமாதானமுயற்சியை மிகத் தெளிவாக உறுதிப்படுத்தி வருகிறது.

லயனலின் பங்கு

சமாதான பேச்சுகளுக்கான பூர்வாங்க ஒழுங்குகளை மேற்கொள்வதில் வடபகுதி மக்களின் நண்பரும் தகவல் அமைச்சின் செயலாளருமான லயனல் பெர்னாண்டோ ஈடுபட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சமாதானப் பேச்சுகளை நடத்துவதற்கான ஒழுங்கு முறைகளை செய்வதற்கும் — முறையான பேச்சுகளை ஆரம்பிப்பதற்கும் — காலத்தை வீணாக்கக்கூடாது. இது முக்கியமானது.

சமாதான பேச்சுகளின் நம்பகத்தன்மையை எந்த நேரத்திலும் பராமரிப்பதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டும்.

பண்டா — செல்வா ஒப்பந்தம்

1958 இல் தமிழர் பிரச்சினைக்கு விரைவாக முடிவு காணும் வாய்ப்பை பண்டா — செல்வா உடன்படிக்கை ஏற்படுத்தியது.

ஆனால் அன்றைய எதிர்க்கட்சி அந்த உடன்படிக்கையைக் கண்டித்து நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. அதனால் அவ் வாய்ப்பு சிதறடிக்கப்பட்டது. அதனால் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் ஒரு சந்தர்ப்பம் காணாமற்போனது.

பண்டா — செல்வா உடன்படிக்கையின் பிரதம கர்த்தாவான பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பின்னர் படுகொலை செய்யப்பட்டார்.

டட்லி — செல்வா உடன்பாடு

பின்னர், 1960 நடுப்பகுதியில் டட்லி — செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனை அமுல் நடத்த அரசு எடுத்த முயற்சி எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பால் தோல்வி கண்டது.

இலங்கை — இந்திய ஒப்பந்தம்

1987 இல் இலங்கை - இந்திய உடன்படிக்கை வந்தது: தன்னிச்சையாக அதனை அமுல்படுத்த அரசு எடுத்த முயற்சி நாடு தழுவிய வன்செயல் நிறைந்த எதிர்ப்பை ஏற்படுத்தியது. உயிர்கள் மற்றும் உடைமைகளுக்குச் சேதமேற்பட்டது.

கடந்த கால சமாதான முயற்சிகள் தோல்வி அடைந்ததற்கான காரணம் குழப்பத்தைத் தருகிறது.

சமாதான முயற்சி மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அந்த கால கட்டத்தில் இருந்த உத்தியோக பூர்வ எதிர்க்கட்சி, சமாதான உடன்பாடுகளினால் வரும் நன்மைகளைக் கணக்கெடுக்காது, அவற்றை ஒரேயடியாக நிராகரித்து வந்துள்ளது.

பதவியில் இருக்கும் அரசாங்கத்தை அவமரியாதைப் படுத்துவதற்காக, வகுப்புவாத உணர்வுகளை தூண்டிவிடும் தந்திரத்தையே காலத்துக்குக் காலம் எதிர்க்கட்சிகள் கடைப்பிடித்து வந்தன.

எதிர்க்கட்சிகள் சந்தர்ப்பவாதம்

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிர்க்கட்சிகள் நாட்டின் நலன்கள் பற்றி கவலைப்படாமல், சந்தர்ப்பவாதத்தனமாக நடந்து கொண்டன. தேசிய நலனுக்கு மிஞ்சி குறுகிய கால அரசியல் லாபமே மேலோங்கி நின்றது.

எல்லா எதிர்க்கட்சிக் குழுக்களும் புத்திசாலித் தனமற்ற சந்தர்ப்ப வாதத்தையும் குறுகிய கால அரசியல் லாபத்தையும் நிராகரிக்க வேண்டும் என்று நாம் இன்று வலியுறுத்துகிறோம்.

மோதல் அரசியலைக் கைவிட்டு, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிக்கு ஆதரவளிக்க எதிர்க்கட்சிகள் முன்வர வேண்டும்.

இதற்காக இந்த நாட்டு மக்களும் எதிர்கால சந்ததியினரும் எதிர்க்கட்சிகளுக்கு மிகுந்த நன்றியறிதலுடையவர்களாக இருப்பார்கள்.

இவ்வாறு ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

4 ஐ. தே. க. அமைச்சர்கள் மீதான லஞ்ச விசாரணை

மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, செப். 13

நான்கு முன்னாள் ஐ. தே. க. அமைச்சர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள லஞ்சம் மற்றும் ஊழல் குற்றங்கள் தொடர்பான விசாரணையை லஞ்ச ஆணையாளர் நெலும் கமகே மீண்டும் ஆரம்பித்துள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஐ. தே. க. அரசாங்க காலத்தில் சம்பந்தப்பட்ட நான்கு அமைச்சர்களுக்கும் எதிரான விசாரணைகளை நடத்திக்கொண்டிருந்தபோது தான், நெலும் கமகே லஞ்ச ஆணையாளர் பதவியில் இருந்து திடீர் இடமாற்றம் செய்யப்பட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததை அடுத்து, அவர் மீண்டும் லஞ்ச ஆணையாளராக நியமிக்கப்பட்டதுடன், குறிப்பிட்ட நான்கு அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணையை நடத்தும்படி அவருக்கு உத்தரவிடப்பட்டது. [இ-எ]

ஜனாதிபதி மீது நெருக்குதல்

கொழும்பு, செப். 13

நிரந்தர லஞ்ச ஆணைக்குழுச் சட்டத்துக்கு இறுதி அங்கீகாரம் வழங்கவேண்டாம் என்று முன்னாள் ஐ. தே. க அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவுக்கு நிர்ப்பந்தம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் கடந்த அரசாங்கத்தின் கீழ் லஞ்சம் மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் என்று தற்போதைய அரசாங்கத்தில் பதவி வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் தெரிவித்தனர்.

தற்போதைய அரசமைப்பின்படி, ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம் ஜனாதிபதி இறுதி அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னரே சட்டமாகும்.

ஜனாதிபதி விஜேதுங்கா மீது முன்னாள் அமைச்சர்கள் கொடுத்துவரும் நெருக்குதலால், இந்த ஆணைக்குழுச் சட்டத்துக்கு ஜனாதிபதி இறுதி அங்கீகாரம் வழங்குவது சாத்தியமில்லாத காரியம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நிரந்தர லஞ்ச ஆணைக்குழு நியமனம் செய்யப்படுவது தாமதமாகலாம் என்று 'தஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது. [இ-எ]

புலிகளுக்கு தமிழ் மக்களின் முழுமையான ஆதரவு உண்டு

சந்திரிகாவுடனான சந்திப்பின்போது யாழ் ஆயர்

கொழும்பு, செப். 13

தமிழ் மக்கள் தமது நியாயமான உரிமைகளுக்கான போராட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தற்போது புலிகளே இப்போராட்டத்துக்கு தீர்க்கமான தலைமை வகிக்கிறார்கள். ஆகவே புலிகளுக்கு தமிழ் மக்களின் ஆதரவு உண்டு.

யாழ். பேராயர் அருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம், பிரதமர் சந்திரிகாவிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு உண்டா? அப்படியானால் ஏன்? என்று சந்திரிகா கேட்டபோதே யாழ். ஆயர் மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

சாதனைகள் புரிவதற்கு இளம் தலைமுறை தயாராக வேண்டும்

கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் நடேசன் உரை

யாழ்ப்பாணம், செப். 13

"வரலாற்றில் இல்லாத சாதனைகள் இந்த மண்ணில் போராட்டத்தின் மூலம் நுட்பமாகவும், சாதுரியமாகவும் நிலைநாட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. போராட்டத்தின் ஓர் அங்கமான விளையாட்டுத்துறையிலும் உலகம் வியக்கும்வகையில் சாதனைகள் புரிய இளம் தலைமுறையினர் தயாராக வேண்டும்"

இப்படிக் கூறினார் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன்.

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட விளையாட்டரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்கள் நடைபெற்ற கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளின் நிறைவு நாள் நிகழ்ச்சியும், பரிசளிப்பு வைபவமும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா தலைமையில் நடந்த இந்த பரிசளிப்பு வைபவத்தில் திரு. பா. நடேசன் மேலும் கூறியதாவது:

மண்ணுக்கு பெருமை தேட வேண்டும்

"வரலாற்று முக்கியத்துவமான போர்க்கால சூழ்நிலையில் குறிப்பாக இளைய தலைமுறையினர் பெரும் பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் எதிர்நோக்கி உள்ளனர். இந்த காலகட்டத்தில் இளைய தலைமுறையினர் ஆரோக்கியத்தையும், மனவலிமையையும் பெற இத்தகைய விளையாட்டுப் போட்டிகள் உதவும்.

எதிர்காலத்தில் உங்கள் திறமைகளை வெளிக்கொண்டு வந்து இந்த மண்ணுக்கு பெருமை தேடித்தர வேண்டும்.

சாதாரண வீரர்களாக இருக்காது தேசிய, சர்வதேச மட்டத்தில் பங்குகொண்டு மண்ணுக்கு பெருமை தேடித்தர முன்வர வேண்டும்.

இன்று ஆரோக்கியமான தலைமையின் கீழ் தலைநிமிர்ந்து நிற்கும் எம் இனத்தின் பெருமை குறித்து கதைக்காத இடமே இல்லை.

எமது போராளிகளின் வீரமரணப் போராட்டம் குறித்து உலக விஞ்ஞானிகளே ஆராய்ச்சி செய்கிறார்கள். போராளிகளின் திறமைக்கும் வீரத்துக்கும் சரியான தலைமையும் வழிகாட்டலும் தான் காரணம்.

அதே போன்று போராட்டத்தின் ஓர் அங்கமான விளையாட்டுத் துறையிலும் எம் வீரர்கள், வீராங்கனைகள் சாதனை புரிய வேண்டும் —

இப்படி அவர் கூறினார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கல்விப்பணிப்பாளர் வலயம் II திரு. கே. கந்தசாமி பேசுகையில் எமது வீரர்கள் இந்த மண்ணில் மட்டும் சாதனை புரிபவர்கள் அல்லர். அவர்கள் தேசிய மட்டத்தில் மட்டும் அன்றி சர்வதேச மட்டத்திலும் [illegible] வல்லுநர் போட்டிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றதை அவதானிக்க முடிந்தது.

இந்தப் போட்டிகளில் இவர்கள் கட்டுப்பாடாக, ஆர்வத்துடன் பங்கேற்றால் பெரிய விளையாட்டுக்களில் இவர்களுக்கு வாய்ப்பு அதிகரிக்கும் — என்றார்.

வெற்றி தோல்வி பெரிதல்ல

சங்கத்தின் தலைவர் டாக்டர் ஜெயகுலராஜா — தமது தலைமையுரையில் நம் சமூகத்தின் இளைய தலைமுறையினருக்கு இது போன்ற விளையாட்டுப் போட்டிகளை நடத்தி அவர்களை ஊக்குவிக்க வேண்டிய மூத்தோராகிய நாங்கள் எம் கடமையில் இருந்து கடந்த பல வருடங்களாக தவறிவிட்டோம்.

உங்களை வழிகாட்ட வேண்டிய எமது கடமையை இன்று செய்துள்ளோம்.

கடந்த ஒரு வருடகாலத்தில் இந்த சங்கத்தை அமைத்து இளைய போட்டிகளை நடத்த பலரின் ஒத்துழைப்புக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொக்குவில் மேற்கு

அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய (முதலியார்) கோவில் மகாகும்பாபிஷேகம்

மேற்படி ஆலய பரிவார மூர்த்தி கஜவல்லி, மகாவல்லி சமேத சண்முகநாத நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நிகழும் பவவருடம் ஆவணி மாதம் 30 ஆம் திகதி (15 9-94) ஆரம்பமாகி நடைபெறும். மகாகும்பாபிஷேகத்தை தொடர்ந்து மண்டலாபிஷேகமும் சண்முகார்ச்சனையும் 12 நாட்கள் நடைபெறுவதுடன் 15 9 94 முதல் 30-9-94 வரை வருடாந்த அலங்கார உற்சவமும் நடைபெறும்;

ஆலய உற்சவத்தை முன்னிட்டு 16 நாட்களும் தெய்வீக தொடர் அருளுரைகள் இரவு 8.30 மணிக்கு இடம் பெறும்.

பொருள்:

திருவிளையாடல் புராணம்

நிகழ்த்துபவர்:

அறுசமய நெறிப்புலவோன் த. சிவகுமாரன்

(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, அமைப்பாளர் காரைநகர் கம்பன் கழகம்)

காலமும்	கருத்தும்
15-9-94	கதைபிறந்த கதை
16-9-94	இந்திரனே சாலும் கரி
17-9-94	வெள்ளானையின் வேட்கை
18-9-94	மதுரம் கண்ட மாதர்
19-9-94	பெண்களில் தோன்றிய பிராட்டி
20-9-94	மாமனை உவந்த மருமகன்
21-9-94	உக்கிரபெருவழுதியாம் ஒருவன்
22-9-94	கல்லானை அருந்திய கரும்பு
23-9-94	கால்மாறியாடிய கற்பகன்
24-9-94	மாமனாக வழக்குரைத்த மாண்பு
25-9-94	சிவலோகம் காட்டிய சீர்மை
26-9-94	நாவசைந்தால் நாடசையும்
27-9-94	தாயுமாகி நின்ற தயாபரன்
28-9-94	ஆசைக்கு நீ, அறிவுக்கு நான்
29-9-94	மண்சுமந்தும், பண்சுமந்தும்
30-9-94	கதை நிறைந்த கதை

வருடாந்த உற்சவத்தினையொட்டி சைவ சமய அறிவுப்போட்டி ஆண்டு 1 தொடக்கம் 11 வரை தனித்தனியாக 24-9-94 சனிக்கிழமை நடத்தப்படவுள்ளது. பங்குபற்றுவோர் ஆலய இந்து இளைஞர் சபையுடன் 22-9-94 க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பரிபாலனசபையும்
உபயகாரரும்.

விளம்பர அன்பளிப்பு:

ச. லிங்கநாதன் வண்ணச்சோலை
பெரிய பசார், யாழ்ப்பாணம்.

(32859)

திருமண நன்றி நவிலல்

10-09-94 சனிக்கிழமை உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் நடைபெற்ற திருமண வைபவத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்த அருட்திரு அன்ரனிதாசன் ஸ்ராலின், ஜெயச்சந்திரன் அவர்களுக்கும், அன்பளிப்புகள் வழங்கியும் வேறு வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. திருமதி மனுவல்

சி-9168)

கண்ணீர் அஞ்சலி

ஓய்வுபெற்ற சித்திர வித்தியாதிபதியும்,
சிறந்த சிற்பக் கலைஞரும்,
குரும்பசிட்டி சன்மார்க்க சபையின முன்னாள்
தலைவரும், தற்போதைய மணிவிழாக் குழு
தலைவருமான

கலாகேசரி ஆ. தம்பித்துரை
அவர்களின்

திடீர் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கும் சன்மார்க்க சபையினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் துயரங்களையும் தெரிவிக்கின்றோம்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம்
மல்லாகம்.
12-09-1994)

(7640)

கண்ணீர் அஞ்சலி

"ஈழத்து கலையுலகின் விருட்சம் சரிந்தது"

முன்னை நாள் வடமாநில சித்திரப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் குரும்பசிட்டி கலாகேசரி கலாலய இயக்குநரும் சன்மார்க்க சபையின் முன்னாள் தலைவரும் சன்மார்க்க நுண்கலைமன்ற பணிப்பாளருமாகிய

கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை
S L. E. A. S.

அவர்கள் இந்தியாவில் (9. 9. 94) அன்று அமரத்துவம் எய்தியமை கேட்டு கலையுலகமே கலங்கி நிற்கும் இவ்வேளையில் அமரத்துவம் எய்திய அந்த மூத்த கலாமேதைக்கு. ரதச் சக்கரவர்த்திக்கு. இராஜஸ்தபதிக்கு எமது இதயபூர்வமான அஞ்சலியை செலுத்துகின்றோம்.

ஸ்ரீ முருகன் கனக சிற்பாலயம்
மயிலிட்டி, காங்கேசன்துறை

கனகசபை சிற்பாலயம்
மயிலிட்டி காங்கேசன்துறை

(32862)

இதய அஞ்சலி

இணுவையம்பதி ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் ஆரோகணித்துப் பவனி வரும் பெருமைக்கு சுந்தரஞ்சேர் சித்திரத்தேர் ஒன்றினைத் தமது கைவண்ணத்தில் தமது இறுதிப் படைப்பாக நிர்மாணித்து தமிழ் கலை உள்ளங்கள் யாவும் குதூகலிக்கும் வண்ணம் "பவ" வருட வசந்தமான சித்திரை 9 ஆம் நாள் (22-04-1994) வெள்ளோட்ட விழாவையும், 24-04-1994 இல் தேர்த்திருவிழாவையும் நிறைவு செய்து "சிற்பகலா வித்தகர்" எனும் விருதைப் பெற்றவரும் முன்னை நாள் சித்திர பிரதிக் கல்விப் பணிப்பாளரும், சித்திர வித்தகருமாகிய கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை அவர்கள் ஆவணி மாதச் சதுர்த்தியில் (09-09-1994) அண்ணாநகர், திருச்சியில் இறைபத மெய்தியமை அறிந்து எமது துயர் தோய்ந்த இதய அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

இரா. சுந்தரலிங்கம்
(தேர்த்திருவிழா உபயகாரர் சார்பில்)

இணுவில்
11-09-1994 (32861)

மரண அறிவித்தல்கள்

திருமதி மீனாட்சி சுந்தரம்

வேலணை மேற்கைச் சேர்ந்த திருமதி மீனாட்சி சுந்தரம் நேற்று சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அம்பலவாணர் சுந்தரத்தின் அன்பு மனைவியும், நீலாம்பிகை ஞானசூரியன், ஞானாம்பாள் (பொற்கொடி), கருணைநாயகி (பவளம்), தங்கவடிவேல், சண்முகவடிவேல், லோகநாதன் ஆகியோரின் தாயாரும், கணேசபிள்ளை, மனோன்மணி, சாந்தலிங்கம், யோகலிங்கம், சரஸ்வதி, பன்னீர்ச்செல்வி, மனோகரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் இல. 8/2, பெருமாள் கோவில் மேற்கு வீதி இல்லத்தில் இருந்து இன்று பி.ப. 2 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
யோகலிங்கம்
(மருமகன்)

(32867)

திருமதி லெஷ்சுமண ஆச்சாரியார் முல்லையம்மாள்

வண்ணை சிவன் கோவிலடியைச் சேர்ந்த காலம் சென்ற லெஷ்சுமண ஆச்சாரியாரின் மனைவி முல்லையம்மாள் 12.9.94 திங்கட்கிழமை காலை காலமாகி விட்டார்; இவர் பக்கிரிசாமி, வேணுகோபால், கெங்காதரன், ஜெகநாதன், அம்புஜம், கமலவல்லி, இராஜேஸ்வரி, மகேஸ்வரி, ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற துரைச்சாமி, இராஜமணி, இராமையா, கந்தையா, கணபதிப்பிள்ளை, ருக்குமணி, வசந்தா, தனலெட்சுமி, ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.9.94 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வெ. கெங்காதரன்
(மகன்)

806, காங்கேசன்துறை வீதி,
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம். (32853)

திருமதி சரஸ்வதி அப்பச்சிப்பிள்ளை

தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பிரபல சுருட்டு வர்த்தகர் ஆ. த. அப்பச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவி சரஸ்வதி காலமாகிவிட்டார்.

இவர் சொர்ணம்மா (கொழும்பு), காலஞ்சென்ற கணேந்திரன் (சீனித் தொழிற்சாலை, கந்தளாய்), லீலாவதி (கனடா), கமலாதேவி, காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி (வியாபாரம்), சகுந்தலாதேவி, கமலநாதன் (இத்தாலி), சுவாமிநாதன், (வியாபாரம்), காலஞ்சென்ற ரங்கநாதன், பாலசரசா (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சோதிரட்ணம் (பிரதமலிகிதர் நில அளவைப் பகுதி, கொழும்பு), கமலேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற புவனேந்திரன் (P.T. ஆசிரியர், காலஞ்சென்ற தங்கராசா (பிரதமலிகிதர், பொலிஸ் மா அதிபர் காரியாலயம், திருகோணமலை). பத்மராணி, சண்முகரட்ணம் (நிறைவேற்றுப் பொறியியலாளர். வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பளை), பிரேமதர்சினி (இத்தாலி). யோகா. சோதிமணி, சக்திதாசன் (படவரைஞர்' உள்ளூராட்சித் திணைக்களம், மட்டக்களப்பு) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் நேற்று (12-9-94) தாவடியில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்,

தகவல்:
திருமதி ச. சகுந்தலாதேவி
(மகள்)

"சதீஸ் இல்லம்"
பிள்ளையார் கோயிலடி,
தாவடி. (32851)

காசுப்பிள்ளை தம்பித்துரை

(முன்னாள் மனேச்சர் தெனியாய் ஹெயஸ் Co-op)

உரும்பராயைப் பிறப்பிடமாகவும், தாவடி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திரு. கா. தம்பித்துரை 1994-09-11 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி (ஆசிரியை, தாவடி வித்தியாலயம்), தனபாலசிங்கம் (புள்ளி விபரத் திணைக்களம் கொழும்பு), பரமேஸ்வரி, பாலச்சந்திரன் (நில அளவையாளர்), தங்கேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அரியராசா (சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்), (U K), மகேஸ்வரி, துரைசிங்கம், தர்மேஸ்வரி, பாலச்சந்திரன் (U K) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, பொன்னம்மா, நல்லம்மா மற்றும் பாக்கியம், சொர்ணம்மா ஆகியோரின் சகோதரனும்; ஜெயந்தன் [U K] யாழினி, பாலமுரளி, தயாநிதி, காண்டீபன், ராகவன், சுரேஸ்குமார் (ஜேர்மனி), செந்திகுமார், சஞ்சீவன், தனுசா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1994-09-11 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு தாவடி மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

தாவடி தெற்கு,
கொக்குவில். (32848)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/8 இல் உள்ள அச்சகத்தில் 13-09-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

லண்டனில் ஏராளமான சொத்துகளை வாங்கி குவித்த ஐ. தே. க. உயர் அதிகாரி

பொ. ஐ. மு. அரசுக்கு தகவல்

கொழும்பு, செப். 12

ஐ. தே. க. அரசு பதவியில் இருந்தபோது உயர்நிலை அரசு அதிகாரி ஒருவர் சட்ட விரோதமாகச் சேர்த்த சொத்துகள் பற்றியும்—

அவருக்கு வெளிநாட்டில் உள்ள சொத்துக்கள் பற்றியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த அதிகாரிக்கு லண்டனில் மாளிகை போன்ற வீடு, மூன்று பெற்றோல் நிலையங்கள், இரண்டு தனியார் வைத்திய நிலையங்கள் மற்றும் பல விடுதிகள், வீடுகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் உள்ள இவரின் சொத்துகளை அங்கு வசிக்கும் இவரின் சகோதரர் நிர்வகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அதிகாரிக்கு இந்தியாவிலும் ஏராளமான சொத்துகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐ. தே. க. அரசு செய்து கொண்ட பிரச்சினைக்குரிய ஒப்பந்தம் ஒன்றின் நடுநாயகமாக இவரே இருந்தார் என்றும் சொல்லப்படுகின்றது.

ஐ. தே. க. அரசில் அமைச்சர்களாக இருந்தவர்களே இந்த அதிகாரிக்கு அரசில் இருந்த செல்வாக்கு குறித்து அரசுத் தலைமைப் பீடத்துக்கு முறையிட்டிருந்தனர்.

பிலிப்பீன்ஸின் முன்னாள் ஜனாதிபதி பேர்டினண்ட் மார்கோஸின் வெளிநாட்டுச் சொத்துக்களைத் தேடிக்கண்டு பிடித்தது போன்று, இந்த உயர் அதிகாரியின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் தேடிக்கண்டு பிடித்து பறிமுதல் செய்வது குறித்து அரசு தீர்மானிக்க கூடும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த உயர் அதிகாரியே இவ்வளவு சொத்துகளை தமது பதவிக் காலத்தில் சேர்க்க முடிந்தது என்றால்—

இவரது அரசியல் எஜமானராக இருந்தவர் எவ்வளவு சொத்துக்களை சேர்த்திருப்பார் என்பது இவ்வட்டாரங்களின் முக்கிய கேள்வியாக எழுப்பப்பட்டுள்ளது. (எ)

விஜயகுமாரதுங்கா கொலை; எதிரி பிணையில் விடுதலை

சில அரசியல் தலைவர்களையும், அரச அதிகாரிகளையும் கொலை செய்த சம்பவங்கள் தொடர்பாக இதுவரை காலமும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக் கழகத்தின் முன்னாள் கணித விரிவுரையாளர் அமல் சிறிஷாந்த இல்லியசிங்காவை கொழும்பு மேல் நீதிமன்றம் 25 ஆயிரம் ரொக்கப் பிணையில் விடுதலை செய்துள்ளது.

பிரதமர் சந்திரிகாவின் கணவரான விஜயகுமாரதுங்க, ஐ.தே.க. செயலாளர் நந்தலால் பெர்னாண்டோ, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் தேவிஸ் குருகே, கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தர் ஸ்ரான்லி விஜேசுந்தர, மாநகர சபை உறுப்பினர் லெஸ்லி ரணகல, இரகசியப் பொலிஸ் திணைக்களத்தின் முன்னாள் இயக்குநர் பெனட் பெரேரா ஆகியோரின் கொலைகளில் உடந்தையாக இருந்தார் என்று இவர் மீது நீதிமன்றத்தில் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

வடக்கு — கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் அவசரகாலச் சட்டம் தற்போது அமுலில் இல்லாத காரணத்தினால் சந்தேக நபரை பிணையில் விடுவிக்கக் கோரும் மனுவை தாம் எதிர்க்கவில்லை என்று அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஞாயிறு தோறும் இரகசியப் பொலிஸ் திணைக்கள இயக்குநர் முன்பாக ஆஜராக வேண்டும் என்று சந்தேக நபருக்கு உத்தரவிடப்பட்டது. அவரது கடவுச்சீட்டும் பறிமுதல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணை எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ)

ஆலயங்களில்

நவாலி திருச்சாத்தான் மலை அட்டகிரி சிவன்கோயில் ஆவணி மூல உற்சவத்தில் இன்று செவ்வாய் காலை 9 மணிக்கு சிவனுக்கு நவோத்தர சத சங்காபிஷேகமும், விசேட தீபாராதனையும் நடைபெறும். பகல் மகேஸ்வர பூசை இடம் பெறும். மாலை சுவாமி வீதியுலா வருவார். (ஓ)

★ ★ ★

கொழும்புத்துறை மணலியம்பதி ஸ்ரீ மகாமாரியம்மன் — ஐயனார் கோயில் மகா கும்பாபிஷேக, மண்டலாபிஷேகம் பூர்த்தி உற்சவம் இன்று செவ்வாய் காலை 9-30 மணிக்கு நடைபெறும். பகல் அன்னதானம் வழங்கப்படும். மாலை 4 மணிக்கு ஐயனார் வீதி உலா வருவார். (ஓ-30)

★ ★ ★

சரித்திரப் பிரசித்தி பெற்ற பூர்வீக நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 24 ஆம் திகதி அதிகாலை தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த உற்சவம் நிறைவு பெறும். (க-173)

புலிகளுக்கு...

[13 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தார்.

இந்தச் சந்திப்பு கடந்த மாத பிற்பகுதியில் இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போது சந்திரிகாவிடம் மகஜர் ஒன்றையும் யாழ் பேராயர் கையளித்தார்.

சந்திப்பில் மன்னார் மறை மாவட்ட ஆயர் அருட்திரு. இராயப்பு ஜோசப் அடிகளாரும் பிரசன்னமாய் இருந்தார்.

அரச தரப்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், நீதி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகியோர் சமூகமாக இருந்தார்கள்.

பேராயர் சௌந்தரநாயகம், அரசு பின்வரும் விடங்களை உடனடியாக செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

★ பொருளாதாரத்தடை முற்றாக நீக்கப்பட வேண்டும்.

★ போக்குவரத்துப் பாதை வசதிகள் முற்றாக செய்து கொடுக்கப்பட வேண்டும்

★ விமானக் குண்டு வீச்சுக்கள், ஷெல் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

★ மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்

★ மீனவர்களின் தொழில் பாதிக்கும் வகையில் கடற்படையினரால் நடத்தப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

★ இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியேறுவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சந்திப்பு பிரதமர் சந்திரிகாவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

குருசுவாமிக்கு நினைவஞ்சலி

சைவ, தமிழ் வித்தகரும் பெயர்பூத்த பிரசங்கியுமான அமரர் குமாரசுவாமிப் புலவர் குருசுவாமியின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை புதன் கிழமை பி.ப 4 மணிக்கு நடைபெற உள்ளது.

கோக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில், அதன் அதிபர் திரு.க. பழனிவேற்பிள்ளையின் தலைமையில் நடைபெறும் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பல பிரமுகர்கள் நினைவஞ்சலி உரையாற்றுவர்.

அமரர் குருசுவாமியின் உருவப்படத்தினை வைத்திய கலாநிதி பொ. சொர்ணலிங்கம் திறந்து வைப்பார். அமரரது நினைவு மலரும் வெளியிட்டு வைக்கப்படும். (க)

அரசு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குழு ஒன்றை அமைத்துள்ளதாகவும்—

அக்குழுவின் சிபார்சின் படி சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும் — அரசு அறிவித்துள்ளது. (இ-100-4-3)

சாதனைகள்.....

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிடைத்தது.

இன்று கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியை நடத்துகிறோம். எதிர்வரும் பெப்ரவரியில் சிரேஷ்ட போட்டியை நடத்தவிருக்கிறோம்.

இந்தப் போட்டிகளில் வெற்றி தோல்வி பெரிதல்ல போட்டிகளில் பங்கு பற்றி உங்கள் திறமைகளை வெளிக்காட்டினால் அதுவே போதும் — என்றார்

சங்கத்தின் செயலாளர் திரு என். வித்தியாதரன் நன்றி கூறினார்.

பிரதம விருந்தினர் வெற்றிச் சின்னங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

தொலைபேசி ஒற்று கேட்கும் நிலையம் முற்றுகை

கொழும்பு, செப். 12

ஐ. தே. க. அரசு பதவியில் இருந்த காலத்தில் அரசியல்வாதிகளின் உரையாடல்களை ஒற்றுக் கேட்பதற்காக அமைக்கப்பட்டிருந்த ஒற்றுக்கேட்கும் நிலையம் கொழும்பு 7 கேம்பிரிட்ஜ் பிளேஸில் உள்ள வீடு ஒன்றில் இயங்கி வந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

தபால் மற்றும் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தமக்குக் கிடைத்த துப்பு ஒன்றை அடுத்து, சம்பந்தப்பட்ட வீட்டை முற்றுகையிட்டு, அங்கு இயங்கும் தொலைபேசி ஒற்றுக் கேட்கும் இயந்திரத்தை உடனடியாகச் செயலிழக்கச் செய்யும் படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதற்கிணங்க இலங்கை டெலிகொம் நிறுவன அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் பதவிக் காலத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான இந்த உயர்தொழில் நுட்பஒற்றுக்கேட்கும் இயந்திரம் பிரான்ஸில் இருந்து தருவிக்கப்பட்டு பொருத்தப்பட்டது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பிரேமதாஸாவின் பதவிக் காலத்தில் அப்போதைய எதிரணி அரசியல் தலைவர்கள் மற்றும் அனைத்து அரசியல் வாதிகளின் தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக் கேட்க இது பயன்படுத்தப்பட்டது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னரும் ஒற்றுக் கேட்கும் இந்நிலையம், ஆளும் அரசியல் வாதிகளின் தொலைபேசி உரையாடல்களைப் பதிவு செய்து ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து முழு அளவிலான விசாரணை ஒன்றை மேற்கொள்ளும்படி அமைச்சர் மங்கள சமரவீர உத்தரவிட்டிருக்கிறார். (இ-எ)

ஆளும்கட்சி எம்.பிக்கு கொலைப் பயமுறுத்தல்

கொழும்பு, செப். 12

கொலைப் பயமுறுத்தலைத் தொடர்ந்து கம்பஹா மாவட்ட சு. க. எம். பி பெலிக்ஸ் பெரேராவின் வீட்டுக்கு 24 மணி நேரமும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் கொமாண்டோ படையைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அதிபர் ஒருவர், கொமாண்டோ ஒருவர், பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் ஆகியோரை பொலிஸார் தேடி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தலின் பின்னர் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் 7 பொலிஸார் மீது அசிட் தாக்குதல் நடத்தியது தொடர்பாக இம்மூன்று பொலிஸாரும் தலைமறைவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ா)

ராஜ்மோகனின் உருவப்படம் ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப். 13

கடந்த வியாழக்கிழமை மன்னார் பள்ளிக்குடாப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஆறு போராளிகளில் ஒருவரான 2 ஆம் லெப்டினன்ட் ராஜ்மோகனின் (ராமமூர்த்தியே கரட்ணம் — காரைநகர்) வித்துடல் மன்னார் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

தற்போது மேற்படி மாவீரரின் உருவப்படம் அவரது தற்போதைய இல்லமான புளியிரத்தினம் வீதி, கோண்டாவில் மேற்கில் இறுதி வீர வணக்கத்துக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு உருவப்படம் நவாலி அட்டகிரி இடம் பெயர்ந்தோர் குடியிருப்பில் மக்களின் இறுதி வீர வணக்கத்துக்கு வைக்கப்பட்டு அணி வகுப்பு மரியாதையுடன் ஊர்தி பவனியாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி ராணுவ மரியாதையுடன் நினைவுக்கல் நடப்படும். (இ-4)

விவரமாகப் பேச - - -

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமின்றி யாழ்ப்பாண மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம். பருத்தித்துறை ஊடாக மட்டும் இந்தப் பொருள்களை அனுப்பக்கூடியதாக இருப்பதால் எமக்குச் சிரமங்கள் உண்டு. எனவே யாழ்ப்பாண மக்களுக்கு பொருள்கள் தாமதமின்றி கிடைக்கக்கூடிய வழிவகைகள் பற்றி பரிசீலனை செய்ய விரும்புகின்றோம்

இயல்பு நிலையை ஏற்படுத்த...

பொது மக்களது வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் வகையில் விரைவாக மின்சார விநியோகத்தை மீளமைக்கவும், பெருஞ்சாலைகளைத் திருத்தவும், நீர்ப்பாசனத் திட்டங்களை சீரமைக்கவும் எமது அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கவும், சமாதானத்தை [illegible] பண்ணவும் எமது அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவதாக நீங்கள் உறுதி அளித்திருப்பதை நாம் வரவேற்கிறோம்.

எனவே மேற்குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டங்களின் சீரமைப்பு வேலைகளில் ஈடுபடப்போகும் எமது தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு சகல ஒத்துழைப்பையும் வழங்குவீர்கள் என நாம் எதிர்பார்க்கிறோம்.

ஆரம்பப் பேச்சுக்களை நடத்துவதற்காக நாம் நியமிக்கப்போகும் பிரதிநிதிகள் இவ்விடயம் சம்பந்தமான நடைமுறைப் பிரச்சினைகள் குறித்தும் பேச்சுக்களை நடத்தலாம் எனக்கருதுகிறோம்.

—நன்றி—
உங்கள் நேர்மையுள்ள
சந்திரிகா பண்டாரநாயக்கா
குமாரதுங்கா,
பிரதம அமைச்சர்.

லயனல்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வுப் பணிகள் குறித்த விபரங்களையும் அவர் சேகரிப்பதாக கொழும்புத் தகவல்கள் மூலம் தெரிய வருகிறது. [இ-3]

மீட்டல் வகுப்பு
O/L விஞ்ஞானம்
MR. J R ஸ்ரீ
ஆரம்பம்
17-9-94
சனி 7.00 A.M.
SHAMROCK
யாழ் சுண்டுக்குளி
(32856)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
FACULTY OF MEDICINE

COMMENCEMENT OF THE ACADEMIC YEAR 1994/95

The Academic Year 1994/95 will commence on Monday, 3rd October 1924 to all Medical Students including new admissions.

- REGISTRAR.

[C-9108]

கல்விப் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் ஆண்டுத் தேர்வு 1993

கல்விப் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் முழு நேரம், பகுதி நேரம் - 1 பகுதி நேரம் பகுதி - 11 ஆகிய மாணவர்கள் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் ஒரு பாடத்திற்கு 50/- வீதம் மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பங்களுடன் இணைத்து ஒக்டோபர் 14ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சை அனுமதி அட்டைகளை ஒக்டோபர் 27 - 28 திகதியில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சைகள் நவம்பர் 14ஆம் திகதி ஆரம்பமாகும்.

- பதிவாளர்.

[இ-9107]

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
08
12
1942

உதிர்வு:
13
09
1990

அமரர் கந்தையா கோபாலபிள்ளை

(கோபால் அன் சன்ஸ் - சமாதான நீதிவான்)

நாளும் பொழுதும் உருண்டோடி நான்காண்டுகள்
ஆனது - அப்பா
உன்னதத்தால் உயர்ந்த உத்தமன்
நீங்கள் - அப்பா
நான்காண்டுகள் என்ன நாலாயிரம் ஆண்டுகள்
சென்றாலும் நாங்கள் உங்களை மறவோம் - அப்பா

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகிறோம்.

இங்ஙனம்:
மனைவி, மக்கள்

51, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். [32857]